தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் ஓர் ஆய்வு

பகுதி-1

ஜ. சாதிக்

பொ. சுரேந்திரகுமார்

கலைக் கழகம்

LC
N86
134947

தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் ஓர் ஆய்வு

பகுதி 1

தொகுப்பாசிரியர்கள்

பேராசிரியர் ஜ. சாதிக், எம்.எஸ்.ஸி., பிஎச்.டி.,
அறிவியற் புலத்தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

பொ. சுரேந்திரகுமார், எம். எஸ். ஸி.,
இளநிலை ஆய்வாளர்,
சித்த மருத்துவத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 44

திருவள்ளுவர் ஆண்டு–2017–தை சனவரி–1986

தொகுப்பாசிரியர்கள் : ஐ. சாதிக்
பொ. சுரேந்திரகுமார்

நூல் : தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் ஓர் ஆய்வு

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ 22-00

அச்சு : சர்மாஸ் சானடோரியம் அச்சகம்
புதுக்கோட்டை.

முகவுரை

சித்த மருத்துவம் பற்றி நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் மூலம் அறியமுடியாத பல மூலிகை மருந்துகளையும் சித்தத் தயாரிப்புகளையும் மக்கள் தமது முன்னோர்களின் அனுபவம் மூலமாகவும் சொந்த அனுபவம் மூலமாகவும் தெரிந்து பயன் படுத்தி வருகிறார்கள். ஏனைய மருத்துவ முறைகளால் குண மாக்குவதற்கு அரிதான பல நோய்கட்கு எளிய வீரியம்மிக்க மருந்துகளை மக்கள் கையாண்டு வருகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்ட மக்களிடையே பயன்படுத்தப்படும் இது போன்ற பல மூலிகை மருந்துகளை அறிந்து கொள்ளும் பொருட்டு தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை ஒரு களஆய்வு மேற்கொண்டுள்ளது. மூலிகைப் பயன்கள் பற்றிய இந்தக் களஆய்வு வட்டங்கள் வாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் உள்ள ஊர்களில் இந்த ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டுச் சித்த மருத்துவத்துறையின் இளநிலை ஆய்வாளர் நேரடியாகச் சென்று அந்த ஊர்களின் தலைவர்கள், பெரியவர்கள் வைத்தியர் கள் மூலமாகப் பொதுமக்களிடம் அறிமுகம் பெற்று இந்த ஆய்வுத் தொடர்பான செய்திகள், சித்த மருந்துகள், மூலிகைகள் பயன் படுத்துபவர்களிடமிருந்து திரட்டப்பட்டன. வியாதிகள் பற்றிய மக்களின் சொந்த அனுபவம், நூல்முறை அனுபவம், கேள்வி அனுபவம், அவ்வியாதிகட்கு மக்கள் செய்து வரும் சிகிச்சை முறைகள் பயன்பாட்டு விபரம், அவ்வியாதிகட்கு மக்கள் செய்து வரும் சிகிச்சை, மருந்து செய்முறை, மூலிகை கிடைக்கும் இடம், தகுந்த அனுபானம், பத்திய முறைகள், பத்தியம் தவறினால் ஏற்படும் விளைவுகள், பத்தியம் முறிக்கும் முறைகள், அம் மருந்தினை மக்கள் அறிந்து கொண்ட விதம் போன்றவைகள் அறியப்பெற்றன.

இவ்விபரங்களை அறிந்து கொள்வதற்கெனச் சித்த மருத்துவ துறை தயாரித்து அச்சிட்ட வினா அட்டவணையில் மக்களிட மிருந்து அறியப்பெற்ற விபரங்கள் குறிக்கப்பட்டன.

இந்த ஆய்வில் பொதுமக்கள் மற்றும் வைத்தியர்களிடமிருந்து அவர்கட்கு அனுபவமுள்ள நன்கு அறிந்த வியாதிகட்குப் பயன் படுத்தப்பட்ட மருத்துவ முறைகளை கேட்டறிந்த பின்னர், ஏனைய பல வியாதிகட்கு அவர்கள் தெரிவித்த செய்திகளும் சேகரிக்கப்பட்டன. வினா அட்டவணை கடைசியில் இணைக்கப் பட்டுள்ளது.

இக்கள ஆய்வானது சித்த மருத்துவத்துறைப் பேராசிரியர் ஜ. சாதிக் அவர்களின் ஆய்வுத் திட்டமாக உருவாக்கப்பட்டு பேராசிரியர் மேற்பார்வையில் இளநிலை ஆய்வாளர் திரு. பொ. சுரேந்திரகுமார் பங்கேற்றுத் திரட்டிய செய்தித் தொகுப்பாகும். இச்செய்திகளைத் திரட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பணிநாட்கள் பதினைந்தாகும். இச்செய்தி தொகுப்பானது பாமர மக்களுக்கும் படித்தவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பயனாகுமென்று நம்புகிறோம்.

இச்செய்திகளைத் திருத்துவதற்கு உதவி புரிந்த முன்னாள் இந்திய மருத்துவ இயக்குநர் திரு. க. சு. உத்தமராயன் அவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

பேராசிரியர் ஜ. சாதிக்
பொ. சுரேந்திரகுமார்

உள்ளடக்கம்

		பக்கம்
1.	பால்வினை நோய்கள், வெள்ளை, வெட்டை (மேகநோய்கள்), விந்துப் பெருக்கம், மாத விலக்கு நோய்கள், கருத்தரிக்க, தாம்பத்திய வாழ்கைக்கு	1 – 12
2.	வயிற்று நோய்கள்	13 – 20
3.	காசம்	20 – 22
4.	மூலம்	23 – 24
5.	ஆஸ்த்மா	25 – 26
6.	பாம்புக்கடி, பிற நச்சுக்கடி, தேள்கடி	27 – 29
7.	சொறி, சிரங்கு, கரப்பான், மேகஊரல், தோல் நோய்கள்	30 – 34
8.	தலை மயிர் நோய்கள் (தலை மயிர் உதிர்தல், இளநரை)	34
9.	உடல் வெப்பம்	35
10.	உடல் குளிர்ச்சி	35
11.	உடல் சக்தி	36
12.	வாதம்	36 – 39
13.	வாய்வு	39 – 40
14.	சூலை	40 – 41
15.	நெஞ்சுவலி, ஈரல்குலை வலி, இருதயவலி	41 – 42
16.	சர்க்கரை நோய்	43
17.	குட்ட நோய்கள்	43 – 44
18.	மூளை நோய்	44 – 45
19.	நரம்பு வலி	45 – 46
20.	கண் நோய்கள்	46
21.	காது நோய்கள்	47
22.	பல் நோய்கள்	47
23.	புண், காயம்	48 – 50
24.	சுரம், விடாச்சுரம் (டைபாய்டு), முறைச்சுரம் (மலேரியா), யானைக்கால் சுரம்	51 – 54
25.	குழந்தைகளின் நோய்கள் (பிள்ளைபிணி) சிவப்பு நோய் (செவ்வாய் பூ & கருவாய் பூ), மாந்தம், கணை, வாந்தி, செரியாமை	54 – 55
26.	தலைவலி (ஒரு பக்கத் தலைவலி, எழுஞாயிறு படுஞாயிறு)	56 – 58
27.	சளி நோய்கள்	59 – 60
28.	இருமல்	61 – 64
29.	மஞ்சட்காமாலை	64 – 67
30.	அனைத்து நோய்களுக்கும்	67 – 68
32.	மாட்டு நோய்கள்	68 – 69

பால்நோய், வாதமேகரோக நோய்கள் மேலும் தாய்ப்பால் சுரப்பிக்கும்

ஓரிலைத்தாமரை லேகியம்

செய்முறை:

ஓரிலைத் தாமரை, சம்மூலம், ஏலம், சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய் வகைக்கு 25 கிராம், பேரிச்சம்பழம் $\frac{1}{2}$ கிலோ, நாட்டு நெய் 100 கிராம், தேன் $\frac{1}{4}$ கிலோ, பசும்பால் $\frac{1}{2}$ லிட்டர், சர்க்கரை $\frac{1}{2}$ கிலோ. சரக்குகளைக் காயவைத்து இடித்துப் பொடியாக்கி, சர்க்கரையைப் பாகாக்கி நெய் விட்டு மெழுகுபதத்தில், இறக்கவும்.

அளவு	கொண்டைக்கடலை
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	—
பத்தியம்	இச்சா

தே$_1$: பு$_2$: பா$_1$: கு : த

பெண்களின் சேர்க்கையினால் ஏற்படும் நோய்கள்

கெந்திச்சுடர் தைலம்

செய்முறை:

கந்தகம் 4 பலம், ரசம், அரிதாரம், பூச்சூடன், வீரம், மனோசிலை வகைக்கு 1 பலம், வெடியுப்பு 3 பலம் எடுத்து இவைகளை $\frac{1}{2}$ கிலோ பசு நெய்யில் அரைத்து துணியில் சுற்றித் தீயில் கொளுத்தி, அதே நேரத்தில் மீதி உள்ள நெய்யை இதன் மேல் சொட்டுச் சொட்டாக ஊற்றினால், இது சொட்டுச் சொட்டாகக் கீழே வைத்துள்ள பாத்திரத்தில் வடியும். இதனை உள்ளே கொடுக்கவும்.

அளவு	2 சொட்டுகள்—10 சொட்டுகள்
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	10 முதல் இடையில் நிறுத்தி நிறுத்தி 40 நாட்கள் வரை
அனுபானம்	பனை வெல்லம்
பத்தியம்	உப்பில்லாப் பத்தியம், பால் சோறுசாப்பிட

ம$_1$: தி$_3$: பா$_1$: கு : த

பால்வினை நோய்

பூரப்பதங்கம்

செய்முறை:

சுத்தி செய்த அயத்தூள் $\frac{1}{2}$ பலம் சட்டியில் வைத்து அதன் நடுவில் *1* பலம் சுத்தி செய்த சூரத்தை வைத்து மேலும் அயப் பொடியினால் மூடி *4* சாமம் சிறு தீயில் எரிக்கவும்.

அளவு	$\frac{1}{4}$ – $\frac{1}{2}$ **குன்றிமணி அளவு**
ஒருநாள்	**2 முறை**
மொத்த நாட்கள்	**3**
அனுபானம்	**விளக்கெண்ணெய்யில் கலந்து கொடுக்கவும். ஒருமுறை சிறிது மலம் போகும்.**
பத்தியம்	**இச்சா**

ந$_{2}$; தி$_{5}$; பா$_{1}$; கு : த

சுருக்கு வெட்டை

செய்முறை:

சுண்ணாம்புக் கலயத்தில் தண்ணீர்விட்டு இரவுப் பனியில் வைத்துக் காலையில் தெளிந்த நீரை சாப்பிடவும்.

அளவு	**1 – 2 அவுன்ஸ்**
ஒருநாள்	**1 வேளை**
மொத்த நாட்கள்	**1**
அனுபானம்	—
பத்தியம்	—

இ$_{1}$: கொ$_{1}$: வெ$_{1}$: கு : த

வெட்டை, கண் எரிச்சல், மஞ்சட்காமாலை

செய்முறை:

10 கிராம் சப்ஜா விதையை (திருநீற்றுப்பச்சை விதை) 1 எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து 10 கிராம் பெருஞ்சீரகத்தையும் அரைத்துக் கலந்து சாப்பிடவும்.

அளவு	2 தோலா
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

அ$_6$: கொ$_1$: வெ$_1$: கு : த
க$_6$
ம$_1$

வெள்ளை வெட்டை

செய்முறை:

நஞ்சறுத்தான் இலையை (5 முதல் 10 இலைகளை) வெறுமனே சாப்பிடவும். 3 ஆம் நாள் மருத மரப்பட்டைச் சாறு சாப்பிடவும்.

அளவு	2 அவுன்ஸ்
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	மீன், கருவாடு ஆகாது.

நா$_1$: மே$_1$: வெ$_1$; கு , த

வெட்டை

செய்முறை:

இளநீரில் சில புளியங்கொட்டைகளை ஊறவைத்து மறுநாள் காலையில் சாப்பிடவும்.

அளவு	2 – 3 அவுன்ஸ்
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

இ : கொ₁ : வெ₁ : கு : த

வெட்டை

செய்முறை:

ஆனைநெருஞ்சியைத் தேவையான அளவில் ஒன்று இரண்டாக இடித்து நீராகாரத்துடன் ஊறவைத்து வடித்துக் குடிக்கவும்.

அளவு	2 – 4 அவுன்ஸ்
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

இ : கொ₁ : வெ₁ : கு : த

வெள்ளை வெட்டை

இலந்தை இலை மருந்து

செய்முறை:

10 கிராம் இலந்தை இலையை அரைத்து 100 மி. லி. பசும் பாலில் கரைத்துக் குடிக்கவும்.

அளவு	100 மி.லி
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	—
பத்தியம்	—

தெ$_1$: ம$_1$: வெ$_1$: கு : த

வெள்ளை வெட்டை

செய்முறை:

10 கிராம் அருகம்புல் வேரை கணு நீக்கி அரைத்து 100 மி.லி. பசும் பாலில் கரைத்துக் குடிக்கவும்.

அளவு	100 மி.லி
ஒருநாள்	1 – 2 வேளை
மொத்த நாட்கள்	5
அனுபானம்	—
பத்தியம்	—

தெ$_1$: ம$_1$: வெ$_1$: கு : த

மேக நோய்க்கு

கருவங்கச் செந்தூரம்

செய்முறை:

2 பலம் கருவங்கத்தை உருக்கிக் கழுதை மூத்திரத்தில் ஊற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

ஒரு மட்சட்டியில் கழுதை மூத்திரத்தை வேண்டிய அளவில் ஊற்றி வாய் பொருத்தமான இன்னொரு சட்டியினைக் கவிழ்த்து மேல் சட்டி நடுவில் ஒரு துளை செய்து அதன் வழியாக உருக்கின கருவங்கத்தை ஊற்ற வேண்டும். இல்லையேல் கருவங்கம் சிதறி முகத்திலடித்துவிடும். 3 பலம் குழாய்க் கந்தகத்தை உமிழ் நீரில் அரைத்து கருவங்கத்திற்குக் கவசம் செய்து $\frac{1}{2}$ கஜ புடம் போட்டு மீண்டும் உமிழ் நீர் சேர்த்து அரைத்து 2 முறை புடம் போடவும்.

அளவு	2 அரிசி எடை
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	தேவையை பொறுத்தது
அனுபானம்	தேன்
பத்தியம்	எண்ணை, கடுகு, மீன், கருவாடு, வாழைக்காய், உருளைக் கிழங்கு, சேனைக்கிழங்கு

$நு_2$: $தி_5$; $மே_1$: கு : த

மேகரோக நோய்கட்கு

கருவங்க பற்பம்

செய்முறை:

100 கிராம் காரீயத்தை 21 முறை இலுப்பை எண்ணெயில் உருக்கி, காய்ச்சவும். இதுபோல் 7 முறை பிரண்டைச் சாற்றில் சுத்தி செய்து, சட்டியில் உருக்கி கொட்டைமுத்துச் செடியின் வேரினால் கடைந்து நன்றாகப் பொடி செய்யவும். வெள்ளைக் கல்யாணமுருங்கை இலைச் சாறிட்டு அரைத்து, வில்லைத் தட்டிக் காயவைத்து, ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து 1 கஜ புடம் போடவும்.

அளவு	2 அரிசி எடை
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	24 அல்லது 48
அனுபானம்	தேன், சர்க்கரை
பத்தியம்	நல்லெண்ணெய் கூடாது,

$நா_3$: $சா_1$: $மே_1$; கு : த

வெள்ளை வெட்டை, பெரும்பாடு

சிலாசித்து பற்பம்

செய்முறை:

சிறிது சிலாசித்து, படிகாரம் இவைகளை சுண்ணாம்புக் கவசம் செய்து புடம் போட்டு எடுக்கவும்.

அளவு	புளியங்கொட்டை
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	11
அனுபானம்	தேன், நெய்
பத்தியம்	—

$ப_3$: $சொ_1$; $வெ_1$: கு : த

வெட்டை, பெரும்பாடு, காமாலை, சோகை, வெள்ளை விழுதல், நீர்ச்சுருக்கு, சூடு, உடல் வலிமை பெற, விந்துஊற

கூழ்பாண்ட லேகியம் (பூசனி)

சேரும் பொருட்கள்:

பூசனிக்காய்ச்சாறு 4 படி, தாழைவிழுது சாறு 1 படி, எலுமிச்சம் பழச்சாறு 1 படி, தென்னம் பாளைச் சாறு 1 படி, பசும் பால் 2 படி, சீரகம், மல்லி, மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, அதிமதுரம் வகைக்கு 1 பலம், நெய் ½ படி, தேன் ½ படி

செய்முறை:

அனைத்துச் சாறுகளையும் ஒன்றாய்க் கலந்து 10 பலம் வெள்ளைச் சர்க்கரையுடன் கரைத்துக் காய்ச்சிப் பாகு செய்து அதில் சூரணம் செய்த சம்ப சரக்குகளைத் தூவி நெய் ½ படி விட்டுக் கிளறி, மெழுகு பதத்தில் இறக்கிச் சூடு ஆற்றித் தேன் ½ படி விட்டுப்பிசைந்து புன்னைக் காய் அளவில் சாப்பிடவும்.

அளவு	புன்னைக்காய் அளவு
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	40
அனுபானம்	—
பத்தியம்	புளி, புகையிலை

$கோ_1$: $த_1$: $வெ_1$: கு : தி

$பெ_1$

$விசு_1$

$உ_1$

மேகரோகம்

சேராங்கொட்டைத் தைலம்

செய்முறை:

சுத்தி செய்த சேராங்கொட்டையை, அடியில் துளையிட்ட பானையில் வைத்து அந்தத் துளையில் இரும்புக் கம்பிகளை ஒரு பக்கம் வளைத்துத் தொங்கவிட்டு அடியில் ஒரு பீங்கான் கிண்ணம் வைத்துப் பொருத்தி மேல் பானை சுற்றிலும் வரட்டி அடுக்கி புடமிட தைலம் இறங்கும்.

3 பலம் சேராங்கொட்டையில் குழித்தைலம் இறக்கி நெல்லிக்காய் கந்தகம் 2 பலம், ரசம் 1 பலம், எள்ளு 5 பலம், வெல்லம் 5 பலம் சேர்த்து அரைத்து மெழுகாக்கவும்.

அளவு	சுண்டைக்காய்
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	பனை வெல்லம்
பத்தியம்	இச்சா, கத்திரிக்காய், மாமிசம்

குறிப்பு:

இந்த மருந்தை ½ மண்டலம் பழகிய பின்பு பயன்படுத்த வேண்டும்.

$வ_1$: $ஏ_1$: $மே_1$: கு : த

மேகநோய், குட்டரோக, வெண்குட்டம்

கருவங்கம்

செய்முறை:

காரீயத்தை தேவையான அளவு உருக்கி, இலுப்பை எண்ணெயில் சுத்தி செய்யவும். இதனை இரும்புச் சட்டியில் சிறிது சோற்றுக் கற்றாழை கிழங்கு வேர், சிறிது சிறுகீரை சம்மூலம் சேர்த்து எரித்து, ஈயம் உருக உருக மூலிகைகளைச் சேர்த்து அரைக்க வேண்டும். ஈயம் தங்காமல் அரைத்துப் பத்திரப்படுத்துக.

அளவு	1 அரிசி எடை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	கருப்பட்டி, பசுநெய்
பத்தியம்	இச்சா

$த_1$: $அ_1$: $கு_1$: கு : த
$மே_1$
$வெ_2$

விந்துக் கட்டுக்கு, வெள்ளைப் பிரம்மியம், அஸ்திசுரம்

கருடக்கல் பற்பம்

செய்முறை:

ஆனைஅருகம் புல்லைச் சம்மூலமாக நசுக்கி மண் ஓட்டில் கீழ்மேல் அருகம்புல் வைத்து நடுவில் கருடக்கல் வைத்து மேல் ஓடு மூடி 5 சீலை மண் செய்து 10 வராட்டியால் புடம் போடவும்.

அளவு	1 சிட்டிகை
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	48 நாட்கள் – 3 மாதங்கள் வரை
அனுபானம்	நெய், வெண்ணெய், தேன்
பத்தியம்	—

குறிப்பு:

கருடக்கல் என்பது என்ன என்று அறிய வேண்டுவது அவசியம்.

$கோ_1$: $த_1$: $விக_1$: கு : த

விந்துகட்ட, மேனி மிளிர, துர்நீர் நீங்க, கபம் சூலைநீங்க

செய்முறை:

அமுக்கிராக் கிழங்கைப் பொடித்துத் தேவையான அளவில் பாலில் கொள்ளவும்.

அளவு	1 குவளை (150 – 200 மி.லி)
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	பால்
பத்தியம்	—

$ச_3$: $கு_1$: $விக_1$: கு : த

$மேமி_1$

$து_2$

$க_2$

$சூ_2$

விந்து பெருக

செய்முறை:

முந்திரிப் பருப்பையும், வாதுமைப் பருப்பையும் தேவையான அளவில் அப்படியே சாப்பிடுக.

அளவு	சாப்பிடும் அளவு
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	தேவையான நாட்கள்
அனுபானம்	—
பத்தியம்	—

சு$_2$: மா$_1$: விபெ$_1$: கு : த

மாதவிலக்கு — தடங்கலுக்கு

அயசெந்தூரம்

செய்முறை:

சுக்கு, மிளகு, அரிசி திப்பிலி சமஎடை எடுத்துச் சமஎடை செந்தூரத்துடன் முறையாக தேனில் கலந்து கொடுக்கவும்.

அளவு	—
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	தேன்
பத்தியம்	—

குறிப்பு:

1) அயச்செந்தூரம் 2–4 அரிசி எடையில் சூரணத்துடன் சாப்பிடவும்.

2) இம் மருந்து உடலில் போதிய இரத்தம் இல்லாதவர்கட்கு மாதவிலக்கு முறையாக ஏற்படுவதற்கு உரிய மருந்து.

க$_5$: தி$_7$: மா$_3$: கு : த

மாதவிலக்கில் பெரும்பாடு மற்றும் வயிற்று நோய்கள்

பெரும்பாட்டு லேகியம்

செய்முறை:

மராட்டிமுக்குப்பூ, கடுக்காய்ப்பூ, போஸ்த்தக்காய்ப்பூ எனும் இம்மூன்றையும் சமஎடையில் பொடிசெய்து இதன் 2 பங்கு எடைக்குக் கருப்பட்டி சேர்த்து இடிக்கவும்.

அளவு	கழற்சிக்காய்
ஒரு நாள்	3 முறை (வெறும் வயிற்றில்)
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	காரம் கூடாது, ஓய்வுத் தேவை

அ$_9$: கு$_1$: க$_2$: கு : த

கரு உண்டாவதற்கு

கர்ப்ப சஞ்சீவித் தைலம்

செய்முறை:

பேய்க்குமட்டி விதையைச் சுத்தி செய்து விதை நீக்கிய நேர் வாளத்துடன் (சமஅளவில்) அரைத்துக் குழித்தைலமாக்கிக் கொள்க.

அளவு	8 – 12 சொட்டுகள்
ஒருநாள்	காலை
மொத்த நாட்கள்	3 மாத விலக்கு உள்ள நாட்களில்
அனுபானம்	மஞ்சள்பொடி
பத்தியம்	புளி, பச்சைத்தண்ணீர். மூன்று நாள் குளிக்கக்கூடாது.

அ$_9$: கு$_1$: க$_2$: கு : த

கரு உண்டாவதற்கு மற்றும் பூச்சி ஒழிய

செய்முறை:

வேப்பிலை, நீர்முள்ளி இலை வகைக்கு 5 இலைகள் வீதம் 1 மிளகாய் வத்தல் சேர்த்துக் கசக்கி உள்ளே கொடுக்கவும்.

அளவு	5 இலைகள் வீதம்
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	3 வாரம் வெள்ளிக்கிழமை தோறும்
அனுபானம்	—
பத்தியம்	—

$சீ_1$: $கோ_3$: $க_2$: கு : த

தாம்பத்திய வாழ்க்கைக்கு

வல்லாரை லேகியம்

செய்முறை:

வல்லாரை இலைச் சாற்றில் (1 படி) சர்க்கரை (10 பலம்) சேர்த்து கரைத்து வடிகட்டித் தீயில் வைத்துத் தேன் பாகம் வரும் போது அதில் ஏலக்காய் பொடி, அமுக்கிராக் கிழங்கு பொடி, வாதாம் பருப்புப்பொடி இவைகளைச் சேர்த்து லேகிய பதமாக கிண்டவும்,

அளவு	1 கொட்டைப்பாக்கு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	—
பத்தியம்	—

$தே_1$: $பு_2$: $தா_1$: கு : த

வயிற்று நோய்கட்கு

சோற்றுக் கற்றாழை லேகியம்

தேவையான பொருட்கள்:

சோற்றுக்கற்றாழை 1 கிலோ, வெங்காயம் 1 கிலோ, பனம் கற்கண்டு $\frac{1}{4}$ கிலோ, பசுநெய் $\frac{1}{4}$ கிலோ, எலுமிச்சம்பழம் 1

செய்முறை:

இவைகளை மண்பானையில் வைத்துச் சோற்றுக்கற்றாழை சதை எடுத்து, இரும்புச் சட்டியில் காய்ச்சிப் பனங்கற்கண்டு சேர்த்துப் பசுநெய்விட்டு, இறக்கும்போது பழச்சாறிட்டுக் கிளறி இறக்கவும்.

அளவு	சிறுநெல்லிக்காய்
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

உ$_1$: ரெ$_1$: வ$_1$: கு : த

வயிற்றுப் பூச்சி ஒழிய

செய்முறை:

மாதுளைப் பட்டையைச் சாறெடுத்துச் சாப்பிடவும்.

அளவு	20 மி.லி.
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	—

இ$_1$: மா$_1$: வ$_1$: கு : த

அட்ட குன்மம்

குமட்டி உப்பு

செய்முறை:

குமட்டிக் காயை விதை நீக்கிக் காயின் எடை உப்பு உள்ளே வைத்துக்காயை மூடிக் கவசம் செய்து, கடும்புடமிட்டு எரித்துத் தூள்செய்து கொள்ளவும்.

அளவு	1 சிட்டிகை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	நோயின் வலிமைக்கேற்றபடி
அனுபானம்	பசு மோர்
பத்தியம்	குழைவான மோர்சோறு, உப்பு சேர்ந்த எலுமிச்சை ஊறுகாய் மட்டும் சாப்பிடவேண்டும்,

சொ$_1$: கு$_1$: அகு$_1$: கு : த

வயிற்று நோய்கள்

செய்முறை:

தேவையான அளவில் வில்வ இலையை அரைத்து நீருடன் சேர்த்து சாப்பிடவும்.

அளவு	½ – 1 அவுன்ஸ்
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	தேவையைப் பொறுத்தது
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

நா$_2$: பு$_1$: வ$_3$: கு : த

வயிறு அழற்சி

செய்முறை:

பூண்டின் 6 பல்லை நறுக்கி அடுப்பில் வதக்கி சிறிது தேனில் காய்ச்சிக் கிண்டிக் கடைந்து சாப்பிடவும்.

அளவு	புளியங்கொட்டை
ஒரு நாள்	3 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	காரம் கூடாது, மோர் சாப்பிடவும்

கு$_1$: பு$_2$: வ$_1$: கு : த

குழந்தைகளின் விஷபேதி

விஷபேதி சூரணம்

செய்முறை:

கிளிஞ்சல் சுண்ணாம்பையும், கறிமஞ்சளையும் சமஎடையில் பொடிசெய்து சாப்பிடவும்.

அளவு	1 சிட்டிகை
ஒருநாள்	6 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	வெந்நீர்
பத்தியம்	பால் கொடுக்கக்கூடாது

குறிப்பு:

கிளிஞ்சல் சுண்ணாம்பு கறிமஞ்சளுடன் சமஅளவாக இருப்ப தால் இதனைக் கவனித்துப் பயன்படுத்த வேண்டும்.

கோ$_2$: கு$_1$: விபே$_1$: கு : த

பேதி தடுப்பதற்கு

நேர்வாள மருந்து

செய்முறை:

நேர்வாளத்தை (ஒன்றை) மாட்டுச் சிறுநீரில் ஊறவைத்து வெயிலில் உலர்த்தி எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்துப் பின் அதனுள் இருக்கும் பருப்பை எடுத்து அதனுள்ளே இருக்கும் விஷ இலைகளை எடுத்து தூர எறியவேண்டும். அதன்பின் பசு நெய்யில் வறுத்து அரைத்து இத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, வால்மிளகை சமஅளவில் பொடிசெய்து கலந்து தூளாக்கிக் கொள்ளவேண்டும்.

அளவு	10 கிராம்
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	10
அனுபானம்	காபி, டீ
பத்தியம்	—

$சு_2$: $மு_1$; $பே_1$: கு : த

வயிற்றுப்புண்

நீராகார மருந்து

செய்முறை:

நீராகாரத்துடன் 7 சிறு வெங்காயத்தையும் 1 அச்சுவெல்லம் அளவிற்கு பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடவும்.

அளவு	2 அவுன்ஸ்
ஒரு நாள்	1 காலை
மொத்த நாட்கள்	40
அனுபானம்	—
பத்தியம்	—

$ஆ_1$, $தா_1$: $வ_1$: கு : த

வாய்ப்புண், வயிற்றுப்போக்கு

செய்முறை:

படிகாரம், பூங்காவி சம எடையில் அப்படியே அரைத்துக் கொடுக்கவும்.

அளவு	புளியங்கொட்டை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	10
அனுபானம்	தேன், தண்ணீர்
பத்தியம்	—

இ$_5$: தி$_7$: வ$_3$: கு : த
வ$_1$

வயிற்றுப்புண், வாய்வுக்கோளாறு

குமட்டி உப்பு

செய்முறை:

குமட்டிக் காயையும் சாப்பாட்டு உப்பையும் சம எடையில் இடித்துப் புதுச் சட்டியில் வைத்துச் சீலை மண் செய்து புடம் போடவும். இதை அரைத்து மீண்டும் குமட்டிக் காயுடன் சேர்த்து மீண்டும் புடம் போடவும். இவ்வாறு 3 முறை புடம் போடவும்.

அளவு	கொண்டைக் கடலை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	நோய் குணமாகும்வரை
அனுபானம்	கருப்பட்டி
பத்தியம்	இச்சா

தே$_1$: பு$_2$: வ$_1$: கு : த
வ$_2$

பேதி ஆவதற்கு

செய்முறை:

சுக்கு 10 கிராம், சூரத்தை, நிலவாகை இலை 10 கிராம், கடுக்காய் 10 கிராம் இவைகளை $\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் எரித்துச் சாப்பிடவும்.

அளவு	150 மி.லி.
ஒரு நாள்	1 முறை (காலை)
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

ரா$_2$; கொ$_1$; பே$_1$; கு : த

பேதியைத் தடுப்பதற்கு

செய்முறை:

10 கிராம் வசம்பைச் சுட்டுக் கரியாக்கித் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

அளவு	5 கிராம்
ஒரு நாள்	1 வேளை – 2 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

குறிப்பு:

ஒருநாள் என்று கூறியிருப்பினும் பேதி தொடர்ந்தால் 2 – 3 நாட்கட்கும் கொடுக்கலாம்.

ரா$_2$: கொ$_1$; பே$_1$: கு : த

பேதியைத் தடுப்பதற்கு

செய்முறை:

காசிக்கட்டி 20 கிராம், விளாவித்து 20 கிராம் இவைகளைச் சுத்தி செய்து தேனில் அரைத்துச் சாப்பிடவும்.

அளவு	$\frac{1}{4}$–$\frac{1}{2}$–$\frac{3}{4}$ புன்னைக்காய்
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	வாழைப்பழம்
பத்தியம்	பச்சைத்தண்ணீர், வெற்றிலை போடக்கூடாது, கஞ்சி மாத்திரம் சாப்பிடவும்.

செ$_2$: கோ$_1$: பே$_1$: கு : த

குழந்தைகளின் வயிற்றுப்போக்கு, வாந்தி

செய்முறை:

சிறிதளவு உப்பை வறுத்து, அதேயளவு ஓமத்தைப்போட்டு, அதே அளவில் உப்பிலிக்கொடி இலை, வேலப்பூ, துளசி இலை, வெற்றிலை சேர்த்து வறுத்து வேண்டியஅளவு நீரிட்டுக் கொதிக்க வைக்கவேண்டும்.

அளவு	1 பாலாடை
ஒருநாள்	3 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

பி$_2$: கோ$_1$: வா$_3$: கு : த
வ$_1$

வயிறு சம்பந்தமான அனைத்து நோய்கட்கும்

பிரண்டை உப்பு

செய்முறை:

பிரண்டைக் கணுவை (4 கணு) எடுத்துச் சுத்தம் செய்து, உரலில் சிறிது உப்புடன் நன்றாக இடித்து அடைதட்டிக் காய வைத்து, அகலில் (மண்தட்டு) வைத்து மேல்மூடியிட்டுச் சீலை மண்செய்து காயவைத்து 20 வராட்டியால் புடம் போடவும்.

அளவு	புளியங்கொட்டை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	7 – 40 வரை
அனுபானம்	மோர், வெந்நீர், பச்சைத்தண்ணீர், தேன்
பத்தியம்	—

வீ$_1$: கொ$_3$: வ$_1$: கு : த

இரத்த காசம், காசம், குடல் புண்

சொர்ணகாவி

செய்முறை:

சிறிது காவியைப் பசும்பாலில் சுத்தி செய்து மெல்லிய துணியில் வடிகட்டிப் பீங்கான் கோப்பையிலிட்டு 15 நாள் காயவைத்துத் தேவைப்படும் போது சீனாகற்கண்டு, படிகாரம் சிறிதளவில் சேர்த்து அரைத்துச் சாப்பிடவும்.

அளவு	1 பணஎடை
ஒரு நாள்	2 அல்லது 3 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	பசு நெய், கரும்புச் சாறு
பத்தியம்	இச்சா, காரம் நீக்கவும்.

த$_1$: அ$_1$: கா$_3$: கு : த

கு$_2$

சயரோகம், ஈழைசயம், காசவாய்வு, சிலேற்பன நோய்கள், வாய்வு, மூக்கில் சீறுகின்ற நாற்றம் நீங்க

செய்முறை:

அரிசி திப்பிலி 10 பலம், கடுகு 5 பலம், மிளகு 5 பலம், ஓமம் 2 பலம், வலம்புரிக்காய், சித்தரத்தை, சுக்கு, சீரகம், இலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, இலவங்கப்பத்திரி, நெல்லிக் காய், தான்றிக்காய், கடுக்காய், கிராம்பு, ஏலம், கொடிவேலி வேர்பட்டை வகைக்கு ½ பலம் எடுத்து அனைத்தையும் பொன்வறு வலாக்கிப் பொடித்துச் சிறிது சீனி சேர்த்துத் தேனில் பிசைந்து எடுக்கவும்.

அளவு	சுண்டைக்காய்
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	40
அனுபானம்	—
பத்தியம்	—

சே$_1$: தி$_3$: ச$_2$: கு : த

ஈச$_1$

கா$_3$

சி$_3$

வா$_2$

மேகத்தடிப்பு, மேக அரிப்பு

செய்முறை:

வேப்பிலை 10 கிராம், கடுக்காய்த் தோல் 10 கிராம், கஸ்தூரி மஞ்சள் 3 கிராம் இவைகளை அரைத்து உடம்பில் பூசிக் குளிக்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 காலை
மொத்த நாட்கள்	2
அனுபானம்	—
பத்தியம்	2 மணிநேரம் உடம்பில் ஊற வைத்துப் பின் வெந்நீரில் குளிக்கவும்.

கா$_2$: பு$_1$: அ$_2$: கு : த

எலும்புருக்கி, வெட்டை, வெள்ளை

செய்முறை:

தேள் கொடுக்குப் பச்சிலை $\frac{1}{4}$ சேர் அரைத்து 1 பலம் பவளத்தை இதில் கவசம் செய்து 1 கஜ புடம் போடவும் பற்பமாகும்.

அளவு	2 குன்றிமணி
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	சந்தனச்சாறு
பத்தியம்	இச்சா

ரா$_1$: கொ$_1$: கா$_3$: கு : த
வெ$_1$

காசம்

செய்முறை:

சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், நேர்வாளம், அயத்தூள், ரசம், நாவி, செந்தூரம், மனோசிலை, வெங்காரம், இந்துப்பூ, லிங்கம், அபிரேக்கு, அரிதாரம் இவை அனைத்தையும் சமஅளவில் கழற்சிக்காய் (கழற்கொடி முருங்கை) இலைச்சாற்றில் 3 நாட்கள் அரைத்து 1 குன்றிமணி அளவில் உருட்டிக் காயவைக்கவும்.

அளவு	1 மாத்திரை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	40
அனுபானம்	தேன்
பத்தியம்	—

குறிப்பு:

அபிரேகம் என்று கூறியிருப்பினும், இதன் செந்தூரம் அல்லது பற்பத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இ$_3$: தி$_3$: கா$_3$: கு , த

இரத்த மூலம், கடுப்பு

சாதிக்காய் மருந்து

செய்முறை:

சர்க்கரை 1 பலம், சாதிக்காய் ½ பலம், அபின் ½ பலம் இவைகளை இடித்து தேவையான அளவு தேன் விட்டரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரையாக உருட்டி சாப்பிடவும்.

அளவு	1 – 2 மாத்திரை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	3 – 5
அனுபானம்	—
பத்தியம்	பழைய உணவு, மீன், கருவாடு கூடாது

இ₂ : மா₁ : இ₅ : கு : த

மூலநோய்

நாகபற்பம்

செய்முறை:

நாகத்தை உருக்கி இலுப்பெண்ணையில் 10 முறை உருக்கிச் சாய்த்து எடுக்கச் சுத்தியாகும். இதனை எலுமிச்சைச் சாற்றில் 12 புடம் வைத்துச் சந்தனநிறப் பொடியாக்கிக் கல்வத்திலிட்டு அரைக்கவும்.

அளவு	1 அரிசி எடை
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம் (48 நாட்கள்)
அனுபானம்	தேன், நெய்
பத்தியம்	காரம், வாய்வு பதார்த்தம் கூடாது

தி₁ : அ₁ : மூ₁ : கு : த

இரத்த மூலம்

செய்முறை:

பன்றி மாமிசத்தை, பூண்டு அதிகமாகச் சேர்த்துப் பக்குவமாகச் சமையல் செய்து சாப்பிடவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	மாதம் ஒருமுறை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை மாதந்தோறும்
அனுபானம்	—
பத்தியம்	—

அ₃ : கோ₂ : மூ₁ : கு : த

பௌத்திரம், கரும்புள்ளிகள், மேகரணம், கண்டமாலை, சொறி, குட்டம்

பாலரச மாத்திரை

செய்முறை:

விடதாரி வேர்ப்பட்டை $1\frac{1}{4}$ வராகன், பாலரசம் 1 கிராம், ரசசெந்தூரம் 1 கிராம் இம்மூன்றையும் முலைப்பாலிட்டு அரைத்துக் கடலைப் பதமான மாத்திரையாக உருட்டவும்.

அளவு	1 மாத்திரை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	பால், வெந்நீர்
பத்தியம்	இச்சா

ந₂ : தி₅ : க₃ : கு : த

மே₁

க₄

சொ₅

கு₁

ஆஸ்த்மா

செய்முறை:

தலைசுருளி, ஆடாதோடை, அப்பக்கோவை, குரங்கு மூலிகை (முசுமுசுக்கை), மஞ்சணத்தி, அண்டரண்ட பேரண்ட ராட்சதி, பிரம்மராட்சதி, குடியோட்டி இவைகளின் இலைகளை வகைக்கு "2" வராகன் எடுத்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து சாப்பிடவும்.

அளவு	1 சிட்டிகை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	1 – 2
அனுபானம்	இஞ்சி, துளசி, ஆடாதோடை, வெற்றிலைச்சாறுகள்
பத்தியம்	பழைய உணவு, மீன், கருவாடு கூடாது

அ₇ , சு₁ : ஆ₁ : கு : த

ஆஸ்த்மா

தாளகம்

செய்முறை:

தாளகத்தைச் சுத்தி செய்து, கல்வத்திலிட்டுச் சமஅளவு பூவரசுப்பட்டை, பனங்கள்ளு, ஆலம்பழம், போன்றவைகளைச் சேர்த்து அரைத்துப் புடம் போடவும்.

அளவு	1 அரிசி எடை
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	30
அனுபானம்	தேன்
பத்தியம்	இச்சா

த₁ : ஆ₁ : ஆ₁ : கு : த

ஆஸ்த்மா

துருசு

செய்முறை:

சிறிது துருசைக் குப்பைமேனிச் சாற்றில் அரைத்து வில்லை தட்டி புடம் போடவும்.

அளவு	½ குன்றிமணி
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	10
அனுபானம்	பசுநெய்
பத்தியம்	—

குறிப்பு:

துருசு வர்ந்தி உண்டாக்கும் குணமுடையதாகையால் இதனைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

கோ$_4$; ப$_1$: ஆ$_1$: கு : த

ஆஸ்த்மா, வெட்டை, காசம், எலும்புருக்கி

செய்முறை:

கண்டங்கத்தரி வேரையும் (தேவையான அளவு) 1 துண்டு சுக்கையும் 6 மிளகையும் நன்றாக இடித்து 2 மடங்கு தண்ணீர் விட்டு 1 மடங்காகும் வரை எரித்துப் பயன்படுத்தவும்.

அளவு	½ – 1 அவுன்ஸ்
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	15
அனுபானம்	பால்
பத்தியம்	—

சு$_3$: நா$_1$: ஆ$_1$: கு : த

வெ$_1$

கா$_3$

பாம்புக்கடி, ஏனைய நச்சுக்கடிகள்

பரஞ்சோதி மை

செய்முறை:

மகரவித்து, அழிஞ்சில் வித்து, வெள்ளைக் குன்றிமணிப் பருப்பு, வாளம்பருப்பு, பூண்டு, குக்கில், சுக்கு, மிளகு, திப்பிலி, தில்லைவித்து, கவுரி பாஷாணம், அரிதாரம், நமச்சாரம், வெண் நாவி, கருநாவி, நீர்விஷம், வெங்காரம், மனோசிலை, லிங்கம், பொன்மெழுகு, சீனாகாரம், துருசு, கந்தகம், ரசம் இவைகளைச் சம எடையில் எலுமிச்சம்பழச் சாறிட்டு அரைத்து மெழுகாக்கவும்

அளவு	1 குன்றிமணி
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	40
அனுபானம்	சர்க்கரை
பத்தியம்	—

குறிப்பு:

கந்தகத்தைக் கல்லிலிட்டு பொடி செய்து அத்துடன் ரசத்தைச் சேர்த்து மடியும்வரையில் அரைக்க வேண்டும்.

சி$_2$: தி$_1$: பாக$_1$: கு : த

நச்சுக்கடி

செய்முறை:

மிளகாநங்கை வேர், வெள்ளைக்காக்கட்டான் வேர், வெள்ளை எருக்கு வேர் வகைக்குச் சிறு கைப்பிடியாக அரைத்துச் சாப்பிடவும்.

அளவு	சுண்டைக்காய்
ஒரு நாள்	1 (காலை)வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	உப்பு

ஜுர$_1$: கொ$_1$: வி$_1$: கு : தி

தேள்கடி

செய்முறை:

2 வெற்றிலையுடன் சிறுகொத்து முருங்கை இலை சேர்த்துப் பிழிந்து சாறெடுத்து உடம்பில் தேள் கொட்டிய மறுபக்கக் காதில் 4—5 துளிகள் விடவும்.

அளவு	4 – 5 துளிகள்
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

பா₂ : தி₁ : தே₂ : கு : த

தேள்கடி

செய்முறை:

5 கிராம் நாயுருவி வேரை மென்று சாப்பிடவும்.

அளவு	5 கிராம்
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

அ₂ : தி₁ : தே₁ : கு : த

தேள்கடி

செய்முறை:

தேள் கொட்டிய முள்ளைக் கத்தியால் சுரண்டி எடுத்து விட்டுப் பின்னர் வெங்காயத்தையும் உப்பையும் கடிவாயில் தேய்க்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

$த_2$: $கோ_3$: $தே_1$: கு : த

தேள்கடி

செய்முறை:

மிளகாநங்கை இலையையும், மிளகையும் சேர்த்துச் சம அளவில் சாப்பிட்டால் விஷம் இறங்கும்.

அளவு	1 பிடி தழை
ஒருநாள்	6 முறை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

$மா_1$: $அ_2$: $தே_1$: கு : த

சொறி, சிரங்கு, படை

செய்முறை:

பூலாங்கிழங்கு, கார்போக அரிசி, கருஞ்சீரகம், பரங்கிப் பட்டை, கஸ்தூரி மஞ்சள் வகைக்கு ¼ பலமாகவும், நெல்லிக்காய் கந்தகம் 1 வராகன் எடை வீதமா்கவும் எடுத்து அப்படியே அரைத்துப் புது மண் கலயத்தில் தண்ணீர்விட்டு இதனைக் கலந்து இரவுப் பனியில் வைத்துக் காலையில் தெளிந்த நீரைக் குடிக்கவும்.

இதன் மண்டியினை நல்லெண்ணையுடன் கலந்து உடம்பில் தேய்க்கவும்.

அளவு	¼ சேர்
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	உப்புப் போடாத பச்சரிசி கஞ்சி சாப்பிடவும்

$நா_1$: $கொ_1$: $சொ_1$: கு : த
$சி_1$
$ப_1$

அரிப்பு, சொறி, சரீர தொற்று நோய்கள்

கொடி வேலித்தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

கொடிவேலியின் வேர் மற்றும் இலையை நன்றாக அரைத்து வடைதட்டி நல்லெண்ணெயில் போட்டுச் சிவந்த பருவத்தில் எடுக்கவும். இதில் (எண்ணெயில்) 25 கிராம் கந்தகம் தூள் செய்து கலந்து வடிகட்டவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

$மு_2$: $கொ_3$: $சொ_1$: கு : த

சொறி, கிரந்தி, கரப்பான், வீக்கம், சில்விஷம்

செய்முறை:

பூவரசு சம்மூலத்தை அரைத்துப் பாலுடன் உள்ளே கொடுக்கவும்.

அளவு	2 பாலாடை
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

$ச_{1}$: $கு_{1}$: $சொ_{1}$: கு : த
$சி_{1}$
$வீ_{1}$
$சிவ_{1}$

மேகஊரல்

மேற்பூச்சு எண்ணெய்

செய்முறை:

பூவரசுப்பட்டை, வேம்புப்பட்டை, புங்குப்பட்டை, நாகப் பட்டை வகைக்கு 10 கிராம் இடித்துச் சாறு பிழிந்து ½ சேர் சாறுக்கு ½ சேர் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி, நெல்லிக் காய்க் கந்தகம் 5 கிரர்ம் நொறுக்கிச் சேர்த்து, ஊறவைத்து உடம்பில் தடவவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	1 காலை
மொத்த் நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

$கு_{1}$: $பு_{1}$: $ஊ_{1}$: கு : த

மேகம், ஊரல், பற்று

பலதிரட்டு மெழுகு

செய்முறை:

கல்மேல் உருவி, ஆவிரை மேல் பட்டை, புல் உருவி, சித்தா முட்டி, பேராமுட்டி சம்மூலமாக வகைக்கு 5 கிராமும், பூமி சர்க்கரைக் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு வகைக்கு 5 கிராமும் முடக்கறுத்தான் இலை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சாதிக்காய், மாசிக்காய், வால் மிளகு வகைக்கு 5 கிராம் எடுத்து அனைத்தையும் சேர்த்து இடித்து ¼ கிலோ கருப்பட்டி சேர்த்திடித்துக் கல்நார், கல்மதம், கூகை நீறு வகைக்கு 5 கிராம் சேர்த்து இடித்து 300 மி.லி விளக்கெண்ணை யுடன் அடுப்பில் ஏற்றி மெழுகு பதத்தில் இறக்கவும்.

அளவு	சுண்டைக்காய்
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	20
அனுபானம்	—
பத்தியம்	—

செ$_1$: கொ$_2$; ஊ$_1$: கு : த

மேகநீர், தோல் வியாதிகள், உடல் திடம்பெற

கருவங்கம்

செய்முறை:

25 கிராம் ஈயத்தைச் சுத்தி செய்து நசுக்கி குஞ்சு பொரித்த கோழி முட்டையின் மேல் ஓடு 15 கிராமுடன் சேர்த்து அரைக்கவும். இது சிறிது கருநிறமாக மாறும்.

அளவு	2 குன்றிமணி
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	நோயின் தன்மையைப் பொறுத்தது
அனுபானம்	பசுநெய்
பத்தியம்	உப்பு, புளி கூடாது

குறிப்பு:

(1) வங்கத்திற்கு முன் குறிப்பிட்ட முறைப்படி சுத்தி செய்ய வேண்டும்.

(2) இம் மருந்தை மிகவும் கவனமாக நோயளிக்குக் கொடுக்க வேண்டும்.

வெ$_1$: கொ$_3$: மே$_1$: கு : த

சூலை, கட்டி, புண், கிரந்தி

பஞ்சசூத மெழுகு

செய்முறை:

வீரம், பூரம், லிங்கம், ரசம், ரச செந்தூரம் சம எடையில் பிள்ளைப் பாலில் 5 சாமம் அரைத்துப் பின் தேவையான அளவு தேன்விட்டு அரைத்து மெழுகு பதமாக எடுக்கவும்.

அளவு	குன்றிமணி
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	கருப்பட்டி
பத்தியம்	புளி, நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள் ஆகாது

இ$_{6}$: ம$_{1}$: சூ$_{2}$: கு : த
க$_{7}$
பு$_{1}$
கி$_{1}$

கரப்பான், சொறி, சிரங்கு, அரிப்பு

களிம்பு (மேற்பூச்சு)

செய்முறை:

ஆடுதின்னாப்பாளை 100 கிராம், சூடம் 50 கிராம், புங்கைப்பால் 100 மி. லி. தேங்காய் எண்ணெய் 100 மி. லி. எடுத்து அடுப்பில் சுண்டக் காய்ச்சி எண்ணெயாக்கி பூசவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 வாரம்
அனுபானம்	—
பத்தியம்	புளி கூடாது

ரா$_{3}$: நா$_{2}$; சொ$_{1}$: கு : த
சி$_{1}$
அ$_{1}$

தோல் நோய்

மேற்பூச்சு எண்ணெய்

செய்முறை:

பூவரசுப் பட்டையைச் சாறெடுத்து அதே அளவு நல்லெண்ணையில் காய்ச்சி வடிகட்டவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	—
பத்தியம்	—

கி$_2$: அ$_1$: தோ$_1$: கு : த

தலைசொட்டை (வழுக்கை நீங்க) முடிகருக்க, முடிவளர

செம்பரத்திப் பூத்தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

25 செம்பரத்திப் பூக்களை நல்லெண்ணெயில் காய்ச்சி வடிகட்டி எடுக்கவும். (நல்லெண்ணெய் தேவையான அளவு)

அளவு	1 தேக்கரண்டி
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	எப்போதும் தேய்க்கலாம்
அனுபானம்	—
பத்தியம்	—

நா$_2$: பு$_1$: மு$_1$: கு : த
வ$_3$

உடம்பு சூடு தனிய, பித்தம் குறைய

தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

கரிசலாங்கண்ணிச்சாறு. பொன்னாங்கண்ணிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, அகத்தி இலைச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு வகைக்கு 1 சேராக 5 சேர் நல்லெண்ணெயில் பதமாகக் காய்ச்சி இறுத்து வடித்துக் கொள்ளவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	வாரத்திற்கு 2 முறை
அனுபானம்	—
பத்தியம்	வெந்நீரில் குளிக்கவும், தயிர் கூடாது, பகல் தூக்கம் கூடாது.

இ$_6$: ம$_1$: உ$_2$: கு : த

உடல் குளிர்ச்சி

செய்முறை:

தினம் காலை 5 வல்லாரை இலைகளைச் சாப்பிடவும்.

அளவு	5 இலைகள்
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	வரையறையில்லை
அனுபானம்	—
பத்தியம்	—

இ$_9$: கொ$_2$: உ$_3$: கு : த

உடம்பு சக்திக்கு

செம்பருத்திப்பூ லேகியம்

செய்முறை:

25 செம்பருத்திப் பூக்களை நறுக்கி 5 எலுமிச்சம் பழச் சாற்றில் ஊறவைத்துச் சாறு பிழிந்து அத்துடன் 50 கிராம் கசகசாவையும், 50 கிராம் நற்சீரகத்தையும் அரைத்துக் கலந்து எரித்து 100 கிராம் தேன், 200 கிராம் பசுநெய், 300 கிராம் சீனா கற்கண்டு சேர்த்து லேகிய பதத்தில் இறக்கவும்.

அளவு	கழற்சிக்காய்
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	—
பத்தியம்	—

நா$_3$: சா$_1$: உ$_1$: கு : த

வாதம், நரம்புத்தளர்ச்சி

தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

50 கோழி முட்டைகளை வேகவைத்து மஞ்சள் கருவெடுத்து அதில் வீரம், பூரம், ரசம், ரச செந்தூரம் வகைக்கு 1 வராகன் சேர்த்து வேப்பெண்ணெய், புங்கு எண்ணெய், கடுகு எண்ணெய், புன்னைக்கொட்டை எண்ணெய், இலுப்பை எண்ணெய் வகைக்கு ¼ லிட்டர் சேர்த்து எரித்துக் காய்ச்சித் தேய்க்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	12
அனுபானம்	—
பத்தியம்	மீன், கருவாடு, பழையது கூடாது

செ$_4$: சு$_2$: வா$_1$: கு : த

நத$_1$

முழங்கால் பிடிப்பு

செய்முறை:

பேய் அத்திப் பாலெடுத்து முழங்காலில் நன்றாகத் தடவிக் கொள்ளவும். பின் மாலையில் தளுதா இலையை வெந்நீரில் வேகவைத்து அந்த வெந்நீரில் முழங்காலைக் கழுவவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	தினம்
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	மீன், கருவாடு

சே$_1$: கொ$_3$: வா$_1$: கு : த

வாதம்

[அன்னபேதி தாம்பிரம்

சேரும் பொருட்கள்:

செவ்வள்ளிக்கிழங்குச்சாறு, புளியாரைச்சாறு, பிரண்டைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு, அன்னபேதி தாம்பிரம்

செய்முறை:

தாம்பிரத் தகட்டை, முன்சொல்லிய சாறுகளில் சுத்தி செய்து, அன்ன பேதியைத் தாம்பிரத் தகட்டின் இடையில் வைத்து 1 கஜ புடம் போடவும்.

அளவு	1 பைசா எடை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	30 நாட்கள்
அனுபானம்	சுக்கு, மிளகு, திப்பிலி கஷாயம்
பத்தியம்	இச்சா

தி$_1$: அ$_1$: வா$_1$: கு : த

இளம்பிள்ளை வாதம், பாரிச வாதம், நரம்பு சுளுக்கு

செய்முறை:

கொடிவேலி ஒரு பிடி தழையைப் பூண்டு, மிளகு, சுக்கு, சித்தரத்தை சமஅளவில் எடுத்து இவைகளுடன் சேர்த்து விளக்கெண்ணையில் வதக்கி அரைத்துக் குழம்பாக வைத்துச் சாப்பிடவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

ர₂ : தே₁ : இவா₁ : கு : த
வா₂
நசு₁

வாத ரோகம்

வாத கோடாரி எண்ணெய்

செய்முறை:

கொடிவேலி, கருநொச்சி இலைகள் வகைக்கு 15 கிராம், பூண்டு 100 கிராம், கந்தகம், லிங்கம், பூரம், வாளம் வகைக்கு 10 கிராம் எடுத்துத் தூள் செய்து நல்லெண்ணெய் மற்றும் புங்கு எண்ணெய் வகைக்கு 300 மில்லி லிட்டரில் மேற்கூறிய தூள்களைச் சேர்த்து எரித்துப் பின் வடிகட்டவும்.

அளவு	7 சொட்டு முதல் 21 சொட்டு வரை
ஒருநாள்	1 (காலை)
மொத்த நாட்கள்	1–21
அனுபானம்	பால்
பத்தியம்	கஞ்சி மட்டும் சாப்பிடவும்

நா₃ : சா₁ : வா₁ : கு : த
வ₂

பக்க வாதம், பாரிச வாதம், முகவாதம், கணுக்கால் வாதம், சூலை, சர்வசுரம், சன்னி

சண்ட மாருத செந்தூரம்

தேவையான பொருட்கள்:

கந்தகம் 2 கிராம், வீரம் 2 கிராம், லிங்கம் 8 கிராம், ரச கற்பூரம் 10 கிராம், ரச செந்தூரம் 2 கிராம்.

செய்முறை:

மேற்கூறியவைகளைத் தாய்ப்பாலிட்டு 5 சாமம் அரைக்கவும்

அளவு	1 அரிசி எடை
ஒருநாள்	10 வேளை
மொத்த நாட்கள்	5
அனுபானம்	சுக்கு, மிளகு, திப்பிலி—சூரணம்
பத்தியம்	புளி நீக்கவும்

தெ$_2$: ம$_1$: வா$_1$: கு : த
சு$_2$
ச$_4$

வாய்வு, சளி

செய்முறை:

$\frac{1}{4}$ படி அரிசி, சிறிதளவு உளுந்து, வெந்தயம் சேர்த்துத் தோசை மாவாக ஆட்டித் தேவையான அளவு முடக்கறுத்தான் இலையை சேர்த்தரைத்து தோசையாகச் செய்யவும்.

அளவு	1 தோசை
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	2
அனுபானம்	—
பத்தியம்	—

பா$_1$: தே$_1$: வா$_2$: கு : தி
ச$_1$

வாய்வு

செய்முறை:

சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளை வகைக்கு 25 கிராம் எடுத்து 250 மி. லி. தண்ணீரில் கஷாயமாகக் காய்ச்சவும்.

அளவு	50 மி.லி.
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

பி$_1$: கொ$_1$: வா$_2$: கு : த

முடக்கு சூலை

சங்கவேர் மருந்து

செய்முறை:

சிறிது சங்க வேரை வெள்ளாட்டு மூத்திரத்தில் அரைத்து வடிகட்டவும்.

அளவு	$\frac{1}{2}$ சேர்
ஒரு நாள்	6 முறை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	உப்பு, புளி கூடாது

நா$_1$: மே$_1$: சூ$_1$: கு : த

சூலை, வாதம்

திரணி மருந்து (மேற்பூச்சு)

செய்முறை:

5 கிலோ திரணி இலையை இடித்துப் புதுப்பானையில் நனையும் அளவு தண்ணீர் ஊற்றி ஒருசாதி விறகால் எரித்துப் புதுச் சட்டியில் ஊற்றி மறுபடி சூடு செய்து வலி உள்ள இடத்தில் தடவவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	மீன், கருவாடு கூடாது

$ர_1$: $கொ_3$: $சூ_1$: கு : த
$வா_1$

ஈரல்குலை வலி, நெஞ்சுவலி

செய்முறை:

சுக்கு, நிலவேம்புப்பட்டை, மலைவேம்புப்பட்டை, சிவனார் வேம்புப்பட்டை, கருவேப்பிலை ஈர்க்கு, கொத்தமல்லி, கருப்பட்டி, சிறுதேக்கு சம எடையில் இடித்து 2 லிட்டர் தண்ணீர் விட்டுப் புதுமண் சட்டியில் 1 லிட்டராக வற்ற வைத்து மூன்று பாகமாக மூன்று நாள் கொடுக்கவும்.

அளவு	80 மி.லி.
ஒருநாள்	6 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	கருப்பட்டி, பனைவெல்லம்
பத்தியம்	புகையிலை, பீடி கூடாது

$பா_6$: $கொ_3$: $இ_2$: கு : த

இருதய நோய், வெட்டைச்சூடு, கணச்சூடு எலும்புருக்கி, இரத்த அழுத்தம்

செம்பரத்திப்பூ சிரப்

செய்முறை:

300 செம்பரத்திப் பூக்களை 1½ லிட்டர் தண்ணீரில் காய்ச்சி ½ லிட்டராக்கி 10 எலுமிச்சம் பழச்சாற்றை இத்துடன் கலந்து ¾ கிலோ சீனி சேர்த்துக் காய்ச்சி நூல் பதத்தில் இறக்குக.

அளவு	1 தேக்கரண்டி
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

பா$_1$: தி$_5$: இ$_2$: கு : த

வெ$_1$

க$_5$

கா$_3$

இ$_3$

இருதய நோய்

செம்பரத்திப்பூ சிரப்

செய்முறை:

25 எலுமிச்சைப் பழச்சாற்றில் 100 செம்பரத்திப் பூக்களை ஊறவைத்துச் சாறெடுத்து அதே அளவு தேன் ஊற்றவும்.

அளவு	1 தேக்கரண்டி
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1 மண்டலம்
அனுபானம்	—
பத்தியம்	புகை பிடித்தல், புகையிலை, மது, வாய்வுப்பண்டங்கள் கூடாது

கோ$_2$: கு$_1$: இநோ$_1$: கு : த

சர்க்கரைநோய் குணமாக, நரம்புத் தளர்ச்சி குணமாக, உடல் சக்தி பெற

அபிரேக்

செய்முறை:

ஆறுமாத வெனிகரில் (சீமைகாடி) சிறிது அபிரேக்கை ஊற வைத்துச் சிறிது சீனியுடன் சேர்த்து இடித்துத் தூளாக்கித் தண்ணீரில் அலசிக் காயவைத்து, வெள்ளைக் குண்டு மணியை (சிறிது) ஊறவைத்துப் பருப்பை ஆட்டி அனைத்தையும் நன்றாக சேர்த்து வில்லை தட்டிக் காயவைத்து 1கஜ புடம் போடவும் (இதில் 4 புடம் எலுமிச்சம் பழச்சாற்றில் போடவும்)

அளவு	2 அரிசி எடை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	20 முதல் 40 வரை
அனுபானம்	நெய், வெண்ணெய்
பத்தியம்	இச்சா, தாம்பத்தியம் கூடாது

ரெ$_1$: ப$_1$: ச$_3$: கு : த
உ$_1$
நத$_1$

குட்ட ரோகம்

பச்சிலை மருந்து (மேற்பூச்சு)

செய்முறை:

பொன்னாங்கண்ணி, பொடுதலை, ஆனைநெருஞ்சி, ஆடு தின்னாப்பாளை இலைகளை(எட்டிக்கொட்டைத்தவிர) அனைத்தையும் சம எடையில் இடித்துச் சாறெடுத்து 1 சேர் சாறுக்கு 1 சேர் நல்லெண்ணை விட்டு, எட்டிக் கொட்டையைத் தனியாக அரைத்து இதில் சேர்த்து நன்றாக எரித்து, நாவல் பழம் நிறம் வந்தவுடன் சூடு தணித்து இறக்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	48
அனுபானம்	—
பத்தியம்	வாய்வுப்பண்டங்கள், மீன் கருவாடு மற்றும் பெண்களுடன் உறவு கூடாது.

நா : மே$_1$: கு$_1$: கு : த

குட்டரோகம், வெண்குட்டம், மேகநீர் வியாதிகள்

நிலக்கடம்பைத் தைலம்

செய்முறை:

நிலக்கடம்பைச் சாறும், நல்லெண்ணையும் சம எடையில் இரும்புச் சட்டியில் எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வடிக்கவும் (உள்ளே சாப்பிட்டு மேலே பூசவும்)

அளவு	50 மி.லி.
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	48
அனுபானம்	—
பத்தியம்	இச்சா

ர$_1$: அ$_1$: கு$_1$: கு : த
வெ$_2$
மே$_1$

குழந்தைகளின் மூளைக்காய்ச்சல்

செய்முறை:

அப்பக்கோவைக் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு வகைக்கு 1 பலம் எடுத்து ½ சேர் வேப்பெண்ணையில் காய்ச்சி வடிகட்டவும். இதனை உள்ளே கொடுக்கவும்.

அளவு	½ தேக்கரண்டி
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	பிள்ளைப்பால்
பத்தியம்	புளி கூடாது

அ$_1$: கொ$_1$: மூ$_2$: கு : த

மூளை நோய்

பச்சிலை மருந்து

செய்முறை:

வல்லாரை இலையை நிழலில் உலர்த்தி தேவையான அளவு தண்ணீரில் கஷாயம் ஆக்கிக் கொடுக்கவும்.

அளவு	50 மி.லி
ஒருநாள்	1 – 3 வேளை
மொத்த நாட்கள்	1 மாதம் முதல் 6 மாதம் வரை
அனுபானம்	பனங்கற்கண்டு, தேன்
பத்தியம்	—

ஆ$_1$: தா$_1$; மூ$_2$: கு : த

வாய்வு வலி, நரம்பு நோய்கள், வாதம்

மயிலிறகு தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

மயிலிறகை 10 கிராம் நறுக்கி, 5 கிராம் மனோசிலையைப் பொடித்துத் தூவி அடுப்பில் ஏற்றி 300 மி. லி. தேங்காய் எண்ணெய் ஊற்றி 10 கிராம் தேன் மெழுகை கொட்டி, 5 கிராம் குக்கில், 10 கிராம் பால் சாம்பிராணி, 5 கிராம் வேம்பாடம் பட்டை சேர்த்து எரிய விட வேண்டும், பின்னர் இறக்கி 5 கிராம் பூச்சூடத்தை தூவவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	வரையறை இல்லை
மொத்த நாட்கள்	நோய் குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	—

தே$_1$: பு$_2$: வா$_2$: கு : த
நவ$_1$
வா$_1$

நரம்பு வலி, இருதய வலி, வயிற்றுவலி, சூலை

எட்டி விதை மாத்திரை

செய்முறை:

எட்டி விதையைப் பசு மூத்திரத்தில் ஊறவைத்துத் தோல் நீக்கிக் காயவைத்துக் கருக வறுத்துச் சூரணமாக்கி அதே அளவு சுக்கு, மிளகு, கிராம்பு ஆகியவற்றைச் சூரணம் செய்து அனைத்தையும் கலந்து எலுமிச்சம் பழச்சாறிட்டு 4 சாமம் அரைத்துப் பாசிப்பயறு அளவு மாத்திரைகளாக உருட்டவும்.

அளவு	2 மாத்திரை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	20 (இடைவெளியிட்டு கொடுக்க)
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

சொ$_1$: கு$_1$: நவ$_1$: கு : த

இ$_2$

சூ$_1$

கண் குளிர்ச்சிபெற, உடல் சூடு குறைய, வாய்வு நீங்க

நெல்லிக்காய்த் தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

1 மரக்கால் நெல்லிக்காய்ச் சாறெடுத்து 1 லிட்டர் நல்லெண்ணெயில் ஊற்றிக் காய்ச்சி இத்துடன் பூலாங்கிழங்கு, நன்னாரி வேர், கஸ்தூரி மஞ்சள், ரோஜா மொட்டு, சண்பக மொட்டு, பழம்பாசி போன்றவைகளைச் சம அளவில் இடித்து எண்ணெயில் சேர்க்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	வரையறையில்லை
மொத்த நாட்கள்	தேவையான அளவு
அனுபானம்	—
பத்தியம்	தாம்பத்தியத்தில் ஈடுபடக் கூடாது

மா$_1$: அ$_2$ க$_6$: கு : த

காதுவலி, காதினுள்ளே புண்

செய்முறை:

மருள் செடியினை அடுப்பில் வாட்டிச் சாறெடுத்து, அதனைக் காதில் விடவும்.

அளவு	4 சொட்டுகள்
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

$க_1$: $க_1$: $கா_1$: கு : த

பல் வலி

செய்முறை:

விடதாரி இலையை அப்படியே அரைத்துக் கன்னத்தில் பூசவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை வாரமொரு நாள்
அனுபானம்	—
பத்தியம்	—

$அ_8$; $கோ_3$: $ப_2$: கு : த

ஆணி குத்தியபுண் ஆறுவதற்கு

செய்முறை:

விஷம் முறித்தான் இலையைச் சிறுநீரில் அரைத்துப் பூசவும். நோயாளி ஆணாக இருந்தால் பெண் குழந்தையின் சிறுநீரிலும், நோயாளி பெண்ணாக இருந்தால் ஆண் குழந்தையின் சிறுநீரிலும் அரைத்துப் பூசவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 முறை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	—

ச$_{4}$: மா$_{2}$: பு$_{1}$: கு : த

காயம்

செய்முறை:

சுண்டை இலைச் சாறெடுத்துச் சிறிது சுண்ணாம்பையும் ஒட்டடையையும் கலந்து பத்துப் போடவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	1 முறை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

அ$_{2}$: தி$_{4}$: கா$_{2}$: கு : த

தோல் ர்ணங்கள்

ஊமத்தின் தைலம் (மேற்பூச்சு)

செய்முறை:

ஊமத்தை இலையைச் சாறெடுத்துச் சம அளவு நல்லெண்ணையுடன் காய்ச்சி வடிகட்டவும்

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	3 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	—
பத்தியம்	—

கி$_1$: அ$_1$: அ$_2$: கு : த

ரணசிகிச்சை

துவர் எண்ணெய் (மேற்பூச்சு)

செய்முறை:

¼ சேர் ஊமத்தைச் சாற்றை 2 சேர் நல்லெண்ணெயில்க் காய்ச்சித் துருசு, மிருதார்சிங்கி, பூரம், பூச்சூடம் வகைக்கு ¼ பலம் பொடியார்க்கி எண்ணெயுடன் கலக்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	தேவையான அளவு
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

ந$_2$: தி$_3$: ர$_2$: கு : த

4

சுன்னத்துப் புண் குணமாவதற்கு

செய்முறை:

நல்ல காட்டாமணிப் பாலெடுத்துக் கையில் தேய்த்துத் தடவவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

க$_{2}$: கொ$_{1}$: சு$_{1}$: கு : த

காயம்

செய்முறை:

நாயுருவி இலையுடன் 1 பல் பூண்டு சிறிது மிளகு சேர்த்து அரைத்துக் கட்டவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	—

சு$_{1}$: கொ$_{3}$: கா$_{2}$: கு : த

சுரம், காய்ச்சல்

கஷாயம

செய்முறை:

ஆடாதோடைக் கொழுந்து, நொச்சிக் கொழுந்து, புங்குக் கொழுந்து, காட்டாமணிக் கொழுந்து, வேப்பங்கொழுந்து, ஓமம் சம எடை எடுத்துப் புதுச் சட்டியில் வறுத்து 1 படி தண்ணீர் ஊற்றி $\frac{1}{8}$ படியாகச் சுண்ட வைத்துச் சாப்பிடவும்.

அளவு	$\frac{1}{2}$ ஆழாக்கு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	பனங்கற்கண்டு
பத்தியம்	—

த$_3$: கொ$_3$: சு$_2$: கு : த

விடாச்சுரம் (டைபாய்டு), முறைச்சுரம், (மலேரியா), குளிர்சுரம்

நிலவேம்புக் கஷாயம்

தேவையான பொருட்கள்

நில வேம்பு, சீந்தில், கோரைக்கிழங்கு, பற்பாடகம், விஷ்ணு கரந்தை, வெள்ளறுகு, பேய்புடல், அதிமதுரம், பேரித்து, இம்புறா, ஆடாதோடை, வேப்பம்பட்டை வகைக்கு 15 கிராம்.

செய்முறை:

அனைத்தையும் 8 சேர் தண்ணீர் விட்டுக் கர்ய்ச்சி வற்ற வைத்து இறக்கி வடிகட்டவும்.

அளவு	1 அவுன்ஸ்
ஒருநாள்	3 முறை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	—
பத்தியம்	சாப்பாட்டிற்கு முன் மருந்து சாப்பிடவும்

தெ$_1$: ம$_1$: ம$_2$: கு : த

விடாச்சுரம் (டைபாய்டு சுரம்)

மூலிகை மருந்து

செய்முறை:

கண்டங்கத்திரி, தூதுவளை, விஷ்ணுகரந்தை, முசுமுசுக்கை, சித்தரத்தை வகைக்கு பலம் 1 எடுத்து புதுமண் கலயத்தில் 6 சேர் தண்ணீர் ஊற்றி 3 சேர் ஆக வற்றக் காய்ச்சவும்.

அளவு	50 மி.லி.
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	10
அனுபானம்	—
பத்தியம்	இச்சா

த$_1$: ஆ$_1$: சு$_2$: கு : த

சுரம்

செய்முறை:

ஆடாதோடை இலையினை தேவையான அளவில் தேவையான அளவு தண்ணீருடன் கஷாயமாகக் காய்ச்சி சாப்பிடவும்.

அளவு	$\frac{1}{4}$ ஆழாக்கு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	இச்சா

நா$_3$: சா$_1$: வ$_2$: கு: த

சுரம், சளி, இருமல், இரத்தவிருத்தி,

அயவீரம்

செய்முறை:

100 பலம் அயத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்துத் தண்ணீரில் அலம்பி, மறுபடியும் சாறிட்டு அரைத்து, வில்லைத் தட்டிக் காயவைத்துப் புடம் போட்டு மீண்டும் எடுத்து 25 பலம் வீரத்தைச் சேர்த்து அரைத்துப் பழச்சாற்றில் மீண்டும் புடம் போடவும்.

அளவு	1 முதல் 2 அரிசி எடை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	5 முதல் 10 வரை
அனுபானம்	தேன், வெண்ணெய், நெய் இஞ்சிச்சாறு
பத்தியம்	புளி கூடாது

ரெ$_1$: ப$_1$: சு$_2$: கு : த

சு$_1$

இ$_1$

இ$_4$

குழந்தைகளின் சுரம்

ஓம கஷாயம்

செய்முறை:

ஓமத்தையும், குட்டி விளாந்தழையையும் சம அளவில் வறுத்து $\frac{1}{4}$ படி தண்ணீர் ஊற்றிக் கஷாயமாக்கிக் கொடுக்கவும்.

அளவு	1 பாலாடை
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	2
அனுபானம்	—
பத்தியம்	—

ச$_1$: கொ$_3$: சு$_2$: கு : தி

யானைக்கால் சுரம், நெறிகட்டிச் சுரம்

வேப்பம்பட்டைக் கஷாயம்

செய்முறை:

3/4 சேர் வேப்பம் பட்டையையும், *1* துண்டு சுக்கையும் அரைத்து $1\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் அடுப்பில் வைத்துக் காய்ச்சி $\frac{3}{4}$ சேராக ஆக்கி சாப்பிடவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	மருந்தை வெறும் வயிற்றில் சாப்பிடவும்

தே$_1$: பு$_2$: யாசு$_1$: கு : த

குழந்தைகளின் சிவப்பு நோய்
(செவ்வாய்ப்பூ & கருவாய்ப்பூ)

செய்முறை:

வில்வம் தழையின் மேல் குழந்தையை அரை மணி நேரம் படுக்க வைக்கவும்.

அளவு	$\frac{1}{2}$ மணி நேரம்
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	வில் வம் கிழங்கை அவித்துச் சீனியுடன் குழந்தைக்குக் கொடுக்கவும்

பீ$_1$: கொ$_1$; சி$_2$: கு : த

குழந்தைகளின் மாந்தம், செரியாமை

சொருகல் கஷாயம்

செய்முறை:

புதுமண் சட்டியில் 25 கிராம் மிளகை வறுத்து, 150 மி. லி. தண்ணீர் ஊற்றி 10 கிராம் கருப்பட்டியை வெள்ளைத் துணியில் சுற்றி எரியும் அடுப்பில் வைத்துத் துணி கருகியவுடன் மிளகுத் தண்ணீரில் போடவும். இவை, கொதித்து 3 இல் ஒன்றாக வற்றியவுடன் வடிகட்டவும்.

அளவு	1 பாலாடை
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

பொ$_1$: அ$_1$: மா$_2$: கு : த
அ$_2$

குழந்தைகளின் வாந்தி

செய்முறை:

சிறிது வேப்பம் பட்டையை மேல் தோல் சீவி உள்ளே இருக்கும் நார் போன்ற பகுதியைப் பாலில் ஊறவைத்துக் கொடுக்கவும்,

அளவு	1 பாலாடை
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	குழந்தைப்பால்
பத்தியம்	—

சி$_3$: தே$_2$: குவா$_1$: கு : த

தலைவலி, ஒற்றைத்தலைவலி

செய்முறை:

கடுகு 1 சிட்டிகை, வேப்பங்கொட்டை 3, 1 கரண்டி தாய்ப் பால் இவைகளை அரைத்து நெற்றியில் தடவவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	நோய் குணமாகும் வரை
அனுபானம்	—
பத்தியம்	—

க$_1$: க$_1$: த$_1$: கு : த

தலைவலி

செய்முறை:

வால்மிளகு, மிளகாய் விதை, கிராம்பு போன்றவைகளைச் சம அளவில் நல்லெண்ணெயில் 20 நாட்கள் ஊறவைத்துச் சீசாவில் அடைத்துக்கொள்ளவும்.

அளவு	2 சொட்டு (தடவ)
ஒருநாள்	தேவையான அளவு
மொத்த நாட்கள்	தேவையான நாட்கள்
அனுபானம்	—
பத்தியம்	—

வ$_1$: ஏ$_1$: த$_1$: கு : த

தலைவலி

வல்லாரை எண்ணெய்

செய்முறை:

வல்லாரைச் சாற்றைச் சமஅளவு தேங்காய் எண்ணெயுடன் கொதிக்க வைத்துப் பாதியாக வற்ற வைக்கவும். இதனை தலையில் தடவவும்.

அளவு	தேவையைப் பொறுத்தது
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	தேவையைப் பொறுத்தது
அனுபானம்	—
பத்தியம்	—

ஆ$_1$: தா$_1$: த$_1$: கு : த

தலையில் உண்டான எல்லா் குறைகளுக்கும்

வேப்பெண்ணெய்த் தைலம்

செய்முறை:

1 மடங்கு வேலிப்பருத்தி வேரை 4 மடங்கு வால்மிளகுடன் நசுக்கி 300 மி.லி. வேப்பெண்ணெயில் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கவும் (அதாவது சிவக்கக் காய்ச்ச வேண்டும்). இதனை தலையில் தடவவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	வெந்நீரில் குளிக்கவும் எண்ணையைத் தலையில் 2மணி நேரம் ஊறவைக்க வேண்டும். மோர், புளி கூடாது

ப$_2$: கொ$_3$: மு : கு : த

ஒற்றைத்தலைவலி

தலைவலித் தைலம்

செய்முறை:

500 கிராம் செம்பரத்திச்சாறு, சித்திர மூலம் 500 கிராம், ஆதண்ட வேர் 500 கிராம் இவைகளைப் பசும்பாலில் அரைத்து 300 கிராம் நல்லெண்ணையில் காய்ச்சிப் பின் இறக்கிப் பயன் படுத்தவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	வாரம் இருமுறை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	சீதள பதார்த்தம் கூடாது

ஞா$_2$: கு$_1$: த$_1$: கு : த

ஒற்றைத்தலைவலி

செய்முறை:

25 துளிகள் நல்லெண்ணையுடன் 50 துளிகள் எருக்குப் பால் கலந்து இதனை உள்ளே நாசியினால் இழுக்கவும் (சுவாசிக்கவும்). தொண்டையில் கசப்புத் தன்மை வரும் வரை இழுக்கவும்.

அளவு	தேவையான அளவு
ஒருநாள்	2 முறை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

கோ$_2$: கு$_1$: த$_1$: கு : த

சளி, கபம்

பச்சிலை மருந்து

செய்முறை:

சித்தரத்தை, அரிசி திப்பிலி இவைகளைச் சமஅளவில் வறுத்துப் பொடி செய்து தேனில் சாப்பிடவும்.

அளவு	1 மிளகு–5 மிளகு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	தேன்
பத்தியம்	—

ஆ$_2$: தா$_1$: ச$_2$: கு : த
க$_1$

சளி

செய்முறை:

சோறு வடித்த கஞ்சியுடன் அடுப்புக்கரி கலந்து நெற்றியில் பத்துப்போடவும்.

அளவு	தேவையான அளவு
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

அ$_4$: கொ$_1$: ச$_2$: கு : த

சளி, சூடு தணிய

செய்முறை:

சிறு கைப்பிடியளவு துளசி இலையைத் தேவையான அளவு நாட்டுச் சர்க்கரை சேர்த்துத் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்துப் பின்னர் சாப்பிடவும்.

அளவு	1 பாலாடை
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

பா$_3$: தே$_2$: ச$_1$: கு : த

சளி

செய்முறை:

துளசி இலையை முதல் நாளே தண்ணீரில் ஊறவைத்து, அடுத்த நாள் காலை வெறும் வயிற்றில் அந்தத் தண்ணீரைச் சாப்பிடவும்.

அளவு	1 பிடியளவு இலை (1 டம்ளர் தண்ணீரில்)
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

பெ$_1$: தே$_1$: ச$_1$: கு : த

குத்து இருமல்

செய்முறை:

சித்தரத்தை சிறிதளவு, 1 முழு பூண்டு, வயல் நண்டு 2 இவை களை இடித்துச் சாறு பிழிந்து சாப்பிடவும்.

அளவு	1 - 1½ பாலாடை வரை
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	—
பத்தியம்	—

சா$_1$: தே$_1$: இ$_1$: கு : த

இருமல்

இருமல் கஷாயம்

செய்முறை:

முக்கால்வேளை, பேரரத்தை, சித்தரத்தை, தாளிசபத்திரி, அரிசிதிப்பிலி போன்றவைகளைச் சம்மூலமாகவும், கண்டங் கத்திரி, தூதுவளை, ஆடாதோடை போன்றவைகளின் வேர்களை யும் சம எடையில் இடித்து 8 சேர் நீரில் சுண்டக் காய்ச்சவும்.

அளவு	1 அவுன்ஸ்
ஒருநாள்	2 வேளை
மொத்த நாட்கள்	7
அனுபானம்	—
பத்தியம்	—

தெ$_1$: ம$_1$: இ$_1$: கு : த

கக்குவான் இருமல்

இருமல் சர்பத்

செய்முறை:

சிறிது தேத்தான் விதையைக் கருக வறுத்துத் தண்ணீரில் கொதிக்கவைத்து வடிகட்டித் தேவையான அளவு சர்க்கரை(சீனி) சேர்த்துப் பாகாக்கிச் சர்பத் பதமாகக் காய்ச்சவும்.

அளவு	1 தேக்கரண்டி
ஒருநாள்	4 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

சொ$_2$: கு$_2$: இ$_1$: கு : த

இருமல்

செய்முறை:

ஆடாதோடை இலை, துளசி இலைகளைச் சம அளவில் சாறெடுத்துச் சூடாக்கிக் கொடுக்கவும்.

அளவு	10 மி.லி.
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	5
அனுபானம்	—
பத்தியம்	—

ரா$_3$: நீ$_1$: இ$_1$: கு : த

கபக்கட்டு

பச்சிலை மருந்து

செய்முறை:

துளசி, தும்பைப்பூ, வெற்றிலை இம்மூன்றையும் சமஅளவில் வெந்நீரில் கசக்கிக் கொடுக்கவும்.

அளவு	$\frac{1}{4}$தேக்கரண்டி
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	வெந்நீர்
பத்தியம்	—

இ$_6$: தி$_7$ க$_1$: கு : த

குழந்தைகளின் இருமல்

செய்முறை:

தூதுவளை இலை, முசுமுசுக்கை இலை, மஞ்சணத்தி இலை (நுணா), வேலிப்பருத்தி இலை, ஆடாதோடை இலை, துளசி இலை, கண்டங்கத்திரி இலை வகைக்கு 1 கைப்பிடி எடுத்து, இடித்துச் சாறு பிழிந்து சொரசம் செய்து கொடுக்கவும்.

அளவு	$\frac{3}{4}$ பாலாடை
ஒருநாள்	3 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	—

ஞா$_2$: கொ$_1$: இ$_1$: கு : த

இருமல், இழுப்பு, சளி, அஸ்திசுரம், மஞ்சட்காமாலை, ஆஸ்த்மா

செய்முறை:

100 கிராம் கொடிப்பவளத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் *10* நிமிடம் ஊறவைத்து அலசிச் சுத்தம் செய்து இலந்தைக் கொழுந்து சிறிது அரைத்துப் பவளத்தை இந்தச் சாந்து மையத்தில் உருட்டி சீலைமண் 5 செய்து, ஈரம் காய்ந்தவுடன் 50 வராட்டியால் புடம் போடவும். பின் பவளத்தை நுணுக்கி பசும் பாலில் அரைத்து வெயிலில் உலர்த்தி நுணுக்கவும்.

அளவு	$\frac{1}{4}$ சிட்டிகை
ஒருநாள்	**2 வேளை**
மொத்த நாட்கள்	**தேவையான நாட்கள்**
அனுபானம்	**நெய்**
பத்தியம்	—

தா$_1$: த$_1$: இ$_1$: கு : த
சு$_1$
அசு$_1$
ம$_1$
ஆ$_1$

மஞ்சட்காமாலை மற்றும் சூடு குறைய

செய்முறை:

4 வெள்ளை குன்றிமணி இலைகளை அரைத்து ஆட்டு ஈரலுடன் சேர்த்துப் பாலில் சாப்பிடவும்.

அளவு	**கொட்டைப்பாக்கு**
ஒருநாள்	**1 முறை**
மொத்த நாட்கள்	**6**
அனுபானம்	**ஆட்டு ஈரல், பால்**
பத்தியம்	**உப்பில்லாக் கஞ்சி சாப்பிடவும்**

செ$_3$: கு$_1$: ம$_1$: கு : த

மஞ்சட்காமாலை

செய்முறை:

ஒரு கைப்பிடி ஆவாரை இலையை இடித்துச் சாறுபிழிந்து பசும்பாலில் கலந்து கொடுக்கவும்.

அளவு	¼ சேர்
ஒரு நாள்	1 காலை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	பசும்பால்
பத்தியம்	புளி கூடாது, கஞ்சி மாத்திரம் சாப்பிடவும்

$மு_1$; $பு_1$; $ம_1$; கு : த

மஞ்சட்காமாலை மற்றும் சூடு குறைய

செய்முறை:

கோவை இலையை அரைத்து உள்ளே கொடுக்கவும்.

அளவு	200 மி.கி.
ஒரு நாள்	2 வேளை
மொத்த நாட்கள்	4
அனுபானம்	எருமைத்தயிர்
பத்தியம்	நல்லெண்ணெய், மீன், கருவாடு, பாகல், பூசனி பரங்கிக் காய்கள்கூடாது

$க_1$; $க_1$; $ம_1$: கு ; த

மஞ்சட்காமாலை

தைலம் (தலையில் தேய்க்க)

செய்முறை:

2 பலம் சீரகம், 2 கைப்பிடி கீழ்க்காய் நெல்லி, 1 லிட்டர் பசும்பால் இத்துடன் 1 சேர் நல்லெண்ணெய் சேர்த்துச் சுண்டக் காய்ச்சவும்.

அளவு	4 தேக்கரண்டி
ஒருநாள்	காலை
மொத்த நாட்கள்	தேவையைப் பொறுத்தது
அனுபானம்	—
பத்தியம்	புளி, காரம், எண்ணெய்ப் பண்டம் கூடாது

சி$_1$: ம$_1$: ம$_1$: கு : த

மஞ்சட்காமாலை

மஞ்சட்காமாலை கஷாயம்

செய்முறை:

கீழ்க்காய் நெல்லி இலை 50 கிராம், வில்வம் இலை 50 கிராம், கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், பேய்ப்புடல் 50 கிராம் வெள்ளை மிளகு 50 கிராம், சோம்பு 50 கிராம், இவற்றைக் கஷாயமாகக் காய்ச்சி சிலோசித்துப் பற்பம் சிறிது சேர்த்துச் சாப்பிடவும்.

அளவு	1 அவுன்ஸ்
ஒருநாள்	3 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	—
பத்தியம்	தயிர் மட்டும் சாப்பிடவும்

சி$_1$: ம$_1$: ம$_1$: கு : த

மஞ்சட்காமாலை

மூக்குரட்டை மருந்து

செய்முறை:

தேவையான அளவு மூக்குரட்டை இலையைப் பாலில் அரைத்துக் கொடுக்க வேண்டும்.

அளவு	1 கொட்டை (10 கிராம்)
ஒருநாள்	12 வேளை
மொத்த நாட்கள்	6
அனுபானம்	பசும்பால்
பத்தியம்	உப்பு, புளி, கூடாது

தெ$_1$: ம$_1$: ம$_2$: கு : த

அனைத்து நோய்கட்கும்

செய்முறை:

முடிதாங்கி, கோபுரம் தாங்கி (முசுமுசுக்கை), இடிதாங்கி, சன்னி நாயகம் (தும்பை) இவைகளின் சம்மூலத்தைச் சமஎடையில் பொடிசெய்து சாப்பிடவும்.

அளவு	1 சிட்டிகை
ஒரு நாள்	2 முறை
மொத்த நாட்கள்	குணமாகும்வரை
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

குறிப்பு:

முடிதாங்கி, இடிதாங்கி இவ்விரண்டிற்கும் விளக்கம் தேவை

நீ$_1$: சு$_2$: அ$_2$: கு : த

அனைத்து நோய்கட்கும்

திரிகடுகு சூரணம்

செய்முறை:

இஞ்சி, மிளகு, திப்பிலி, கண்டதிப்பிலி, சித்தரத்தை போன்றவைகளைச் சமஎடையில் தூள் செய்து சாப்பிடவும்.

அளவு	1 சிட்டிகை
ஒரு நாள்	3 வேளை
மொத்த நாட்கள்	3
அனுபானம்	தண்ணீர்
பத்தியம்	—

கி$_1$: அ$_1$: அ$_2$: கு : த

மாட்டிற்கு வயிற்றுவலி, உப்புசம்

செய்முறை:

பெருமருந்து கொடி மற்றும் வேரைச் சாப்பிடும் அளவிற்குக் கொடுகக்வும்.

அளவு	சாப்பிடும் அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	—

பா$_4$: கொ$_2$: மா$_1$: கு : த

மாடு, கழிதல்

செய்முறை:

ஆத்தி இலையைச் சாப்பிடும் அளவுக்கு உள்ளே கொடுக்கவும்

அளவு	சாப்பிடும் அளவு
ஒரு நாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	—
பத்தியம்	தண்ணீர் கொடுக்கக்கூடாது

பா$_4$: கொ$_2$: மா$_1$: கு : த

மாடு, கழிதல்

செய்முறை:

2 ஊமத்தைக் காயைச் சுட்டுப் புல்லுடன் சேர்த்து உள்ளே கொடுக்கவும்.

அளவு	2 காய்
ஒருநாள்	1 வேளை
மொத்த நாட்கள்	1
அனுபானம்	புல், வைக்கோல்
பத்தியம்	மாட்டுக்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது

பா$_4$: கொ$_2$: மா$_1$: கு : த

நோய்க்குறிப்பு அட்டவணை

அட்டகுன்மம் 14
அரிப்பு 30,33
அனைத்துநோய்கட்கும் 67,68
அஸ்திசுரம் 9,64
ஆணி குத்திய புண் குணமாவதற்கு 48
ஆஸ்த்மா 25,26,4
இரத்த காசம் 20
இரத்த மூலக்கடுப்பு 23
இரத்த மூலம் 23,24
இரத்த அழுத்தம் 42
இரத்த விருத்தி 53
இருதயநோய் 42,46
இருமல் 53,61,62,64
இளம்பிள்ளை வாதம் 38
இழுப்பு 64
ஈரல் குலை வலி 41
ஈழை சயம் 21
உடற்சூடு தணிய 35,46
உடல் வலிமைக்கு 7,32,36,43
ஊரல் 32
எலும்புருக்கி 22,26,42
ஏனைய நச்சுக்கடிகள் 27
ஒற்றைத்தலைவலி 56,58
கக்குவான் இருமல் 62
கட்டி 33
கணச்சூடு 42
கண்குளிர்ச்சி 46
கண்டமாலை 24
கணுக்கால் வாதம் 39
கபம் 9,59,63
கரப்பான் 31,33
கரும்புள்ளிகள் 24
கரு உண்டாவதற்கு 11,12
காசம் 20,22,26
காச வாய்வு 21
காதினுள்ளே புண் 47
காதுவலி 47
காமாலை 7
காயம் 48,50
காய்ச்சல் 51
கிரந்தி 31,33
குடற்புண் 20
குட்டரோகம் 8,24,43,44
குத்து இருமல் 61
குழந்தைகளின் விஷபேதி 15
குழந்தைகளின் இருமல் 63
குழந்தைகளின் வாந்தி 55
குழந்தைகளின் செரியாமை 55
குழந்தைகளின் மாந்தம் 55
குழந்தைகளின் சுரம் 53
குழந்தைகளின் வயிற்றுப் போக்கு 19
குழந்தைகளின் மூளைக்காய்ச்சல் 44
குழந்தைகளின் சிவப்புநோய் 54
குளிர்சுரம் 51
சயரோகம் 21
சர்க்கரை வியாதி 43
சர்வ சுரம் 39
சரீர தொற்று வியாதிகள் 30
சளி 39,53,59,60,64
சன்னி 39
சிரங்கு 30,33
சில்விஷம் 31
சிலேற்பன நோய்கள் 21
சுரம் 51,52,53
சுருக்குவெட்டை 2
சுன்னத்துப்புண் குணமாவதற்கு 50
சூடுதணிய 7,60,65
சூலை 9,33,39,41,46
சொறி 24,30,31,33
சோகை 7
தலைச்சொட்டை 34
தலைவலி 56,57

தலையில் உண்டான
எல்லார்க் குறைகளுக்கும் 57
தாம்பத்திய வாழ்க்கைக்கு 12
துர்நீர் நீங்க 9
தேள்கடி 28,29
தோல் வியாதிகள் 32,34
தோல் ரணங்கள் 49
நச்சு விஷக்கடி 27
நரம்புத்தளர்ச்சி 36,43
நரம்பு நோய்கள் 38,45
நரம்பு வலி 46
நீர்ச்சுருக்கு 7
நெஞ்சுவலி 41
நெறி கட்டி சுரம் 54
பக்கவாதம் 39
படை 30
பற்று 32
பல்வலி 47
பாம்புக்கடி 27
பாரிச வாதம் 38,39
பால்நேர்ய் மற்றும் பெண்கள்
தொடர்பான நோய் 1,2
பித்தம் குறைய 35
புண் 33
பூச்சி ஒழிய 12
பெரும்பாடு 7
பேதி ஆவதற்கு 18
பேதி தடுப்பதற்கு 16,18,19
பௌத்திரம் 24
மஞ்சட்காமாலை 64,65,66,
67
மாட்டிற்கு வயிற்றுவலி
உப்புசம் 68
மாடு கழிதல் 69
மாதவிலக்கு தடங்கலுக்கு 10
மாதவிலக்கில் பெரும்பாடு
மற்றும் வயிற்று நோய்கள் 11
முகவாதம் 39
முடக்கு சூலை 40
முடி கருத்தல் 34
முடிவளருதல் 34
முழங்கால் பிடிப்பு 37
முறைச்சுரம் (மலேரியா) 51
மூக்கில் சீறுகின்ற நாற்றம்
நீங்க 21
மூலநோய் 23
முளைநோய் 45
மேக அரிப்பு 21,31,32
மேகத்தடிப்பு 21
மேகநோய் 6,8,32
மேகநீர் 32,44
மேகரணம் 24
மேகரோகம் 6,8
மேனிமினிர 9
யானைக்கால் சுரம் 54
ரணசிகிச்சை 49
வயிற்றுநோய் 13,14,46
வயிற்றுப்பூச்சி 13
வயிறு அழற்சி 15
வயிற்றுப்புண் 16,17
வயிற்றுப்போக்கு 17
வயிறுசம்பந்தமான
அனைத்துநோய்கட்கும் 20
வாதம் 36,37,38,41,45
வாந்தி 19
வாய்வு 17,21,39,40,45,46
வாய்ப்புண் 17
விடாச்சுரம்(டைபாயிடு) 51,52
விந்து ஊறுவதற்கு 7,10
விந்து கட்டுக்கு 9
வீக்கம் 31
வெட்டை 3,4,5,7,22,26,42
வெண்குட்டம் 8,44
வெள்ளை பிரம்மியம் 9

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சித்த மருத்துவத் துறை

தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைள்-ஓர் ஆய்வு

1. பேட்டி அளிப்பவரின் விவரம்

1,1. பெயர் :

1.2. மதம் :

1.3. சாதி :

1.4. ஆண்/பெண் :

1.5. கல்யாணம்
ஆணவர்/ஆகாதவர் :

1.6. கல்வி :

1.7. தொழில் :

1.8. குடும்ப மொத்த
வருட வருமானம் :

1.9. முகவரி :

1.9.1. கிராமம் :

1.9.2. தாலுக்கா :

1.9.3. மாவுட்டம் :

1.9.4. அஞ்சல் எண் :

1. நீங்கள் எந்தெந்த வியாதிகளுக்கு மருத்து கொடுக்கிறீர்கள். வியாதிகளுக்கு எவ்வாறு மருந்து கொடுத்துக் குணப்படுத்துகிறீர்கள் என்பதை விளக்கமாக கீழ்க்கண்டவற்றிற்குப் பதில் கூறவும்.

2.1. வியாதியின் பெயர்	2.2. மருந்தின் பெயர்	2.3. சேரும் மூலிகையின் பெயரும் அளவும்	2.4. உபயோகப் படும் பகுதி	2.5. சேரும் உலோகம்	2.6. மருந்து கிடைக்கும் இடம்	2.7. மருந்து உட்கொள்ளும் முறை 2.7.1. மொத்த நாட்கள்	2.7. மருந்து உட்கொள்ளும் முறை 2.7 2. ஒரு நாளில் எத்தனை முறை	2.7. மருந்து உட்கொள்ளும் முறை 2.7.3. அளவு	2.8. நிவாரணம் தற்காலிகம்/ நிரந்தரம்	2.9. இம்மருந்து அதிக உபயோகத்திலுள்ளது/ எப்போதாவது

2.10 மருத்து செய்முறை	2.11 எதனுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்	2.12 பத்தியமுறை	2.13 பத்தியம் தவறினால் ஏற்படும் விளைவுகள்	2.14 பத்தியம் முறிக்கும் முறை	2.15 இம் முறையைக் கற்றுக் கொண்ட விதம்